(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(5).]**

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 யூலை 27 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 91/2021

கௌரவ ரணில் விக்கிரமசிங்க,— 2021 யூன் மாதம் 22 ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பினுள் MV X-Press Pearl கப்பலானது கடலுக்குள் மூழ்கியதன் காரணமாக இலங்கையின் கடல் சார்ந்த சுற்றுச்சூழலுக்கு மற்றும் கடல்வாழ் உயிரனங்களுக்கு ஏற்பட்ட அனர்த்தம், வாழ்வாதாரம் இழந்த மக்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் ஆகியவற்றை பரிசீலித்து தமது பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,—

2021 யூன் 22 ஆம் திகதி கொழும்புக் கரைக்கப்பால் கடற்பரப்பில் MV X-Press Pearl மூழ்கியமை இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான கடல்சார் சுற்றுச்சூழல் அனர்த்தமாதலாலும்; மற்றும்

இவ்வனர்த்தம் கடல்சார் மற்றும் கடல்வாழ் உயிரினங்களை அழித்ததுடன் பாரிய பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியுள்ளதாதலாலும்;

பின்வரும் விடயங்களைப் பரிசீலனை செய்வதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

(அ) MV X-Press Pearl கப்பல் மூழ்கியமையால் ஏற்பட்ட பொருளாதார அழிவை கணிப்பதற்கும்;

(ஆ) வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையைக் கணிப்பதற்கும்;

(இ) அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவிருக்கும் நிதி நிவாரணம் மற்றும் ஏனைய இழப்பீடுகளை விதப்புரை செய்வதற்கும்; மற்றும்

(ஈ) இவ்வனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட (i) கடல்சார் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் (ii) கடல்கீழ் சுற்றாடல் ஆகியவற்றின் அளவை மதிப்பிடுவதற்கும்;

2. (அ) குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கௌரவ சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) இக்குழுவின் முதலாவது அமர்விலிருந்து ஆறு (6) மாதத்துக்குள் அல்லது பாராளுமன்றம் அனுமதியளிக்கக்கூடிய நீடித்த காலப்பகுதிக்குள் குழு பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும்;

3. (அ) அதன் கூட்ட நடைப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) மேலே சொல்லப்பட்ட விடயங்களின் முழுமையான பரிசீலனைக்காக அவசியம் என குழு கருதும் ஆட்களை நேரடியாக குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு ஆட்களைக் கோருவதற்கும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மூல சான்றுகளை வரவழைப்பதற்கும் அல்லது பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) இக்குழுவுக்கு உதவுவதற்காக தொடர்புடைய துறையிலுள்ள வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; அத்துடன்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அமர்வை நடாத்துவதற்கும்;

குழு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;